# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்.

சுற்றறிக்கை எண்:-19 தேதி:-22.06.2010.

## BSNLஐ காக்க...
## ஒன்று பட்ட, உறுதியான போராட்டம்

அன்பார்ந்த தோழர்களே!

21.06.2010 அன்று BSNL நிர்வாகம், கூட்டு நடவடிக்கைக் குழுவின் தலைவர்களை சந்தித்தது. இயக்குனர் குழுவில் உள்ள அனைத்து இயக்குனர்களும், செயல் இயக்குனர்களும் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர். BSNLEU பொதுச் செயலர் தோழர் P.அபிமன்யூ உள்ளிட்ட கூட்டு நடவடிக்கைக் குழுவில் உள்ள அனைத்து சங்கங்களின் பொது செயலர்களும் விவாதத்தில் கலந்துக் கொண்டனர். BSNL தலைமையகத்தில் STOAஆக பணியாற்றி அகால மரணமடைந்த தோழர் அவஸ்தியின் மறைவிற்கு இந்தக் கூட்டம் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியது.

கூட்டு நடவடிக்கைக் குழுவின் அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி விவாதத்தை துவங்கி வைத்தார். கூட்டு நடவடிக்கை குழு தலைவர்கள் அனைவரும், 3G ஸ்பெக்ட்ரம் கட்டணமாக 10,186 கோடி ரூபாய்களை அவசர கதியில் BSNL, அரசாங்கத்திற்கு செலுத்தியதற்கு தங்களது கடுமையான ஆட்சேபனைகளை தெரிவித்தனர். BWA (அகலக் கற்றை கம்பியில்லா தொடர்பு) ஸ்பெக்ட்ரத்திற்கான கட்டணத்தைக் கட்ட 22.06.2010 அன்று கடைசி தேதி என அரசு அறிவித்துள்ளது. ஆனால் அரசுக்கு அதற்கான கட்டணமான 8,313 கோடி ரூபாய்களை BSNL நிறுவனம் கட்ட கூடாது என கூட்டு நடவடிக்கைக் குழுவின் தலைவர்கள் உறுதியாக தெரிவித்தனர். இந்த விஷயத்தில் தலையிடுவதாகவும், அரசுக்கு இது தொடர்பாக கடிதம் எழுதுவதாகவும் BSNL CMD உறுதி அளித்தார்.

BSNL நிறுவனத்திடமிருந்து அரசாங்கம் வசூலித்து இருக்கும் உயர்ந்த மொத்த வருவாயினை (Adjusted Gross Revenue) எதிர்த்து TDSATஇனை அணுக வேண்டும் என BSNL நிறுவனத்தை கூட்டு நடவடிக்கைக் குழுவின் தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். இது தொடர்பாக தனியார் நிறுவனங்கள் ஏற்கனவே TDSAT இடமிருந்து தடை உத்தரவு பெற்றிருப்பதை சுட்டிக் காட்டினார்கள். இது தொடர்பாக, BSNL உடனடியாக TDSATஇனை அணுகுமென CMD உறுதி அளித்தார்.

அதற்கு பின் BSNLக்கு தேவையான கருவிகள் வாங்குவது தொடர்பாக கூட்டு நடவடிக்கைக் குழுவின் தலைவர்கள் விவாதித்தனர். முன்மொழியப் பட்டுள்ள 55 லட்சம் தொலைபேசி இணைப்புகளுக்கான டெண்டரில் மேலும் 50 சதவிகிதம் வாங்கி கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளதாக BSNL CMD தெரிவித்தார். செப்டம்பர், 2010க்குள் இந்த டெண்டருக்கான முன்கூட்டிய கொள்முதல் உத்தரவு (Advanced purchase order) வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை முடிந்த உடன் நிலைமையினை பரிசீலிக்க கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. 22.06.2010 அன்று காலை 09.30 மணி அளவில் மத்திய தொலைத் தொடர்பு இணை அமைச்சர் திரு சசின் பைலட் உடன் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூட்டு நடவடிக்கைக் குழுவின் அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி தெரிவித்தார். மேலும் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு பிரணாப் முகர்ஜி மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சர் திரு ராசா ஆகியோரை சந்திப்பதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

BSNL நிறுவனத்தை நலிவடையச் செய்து அதனை நிர்மூலமாக்குவதற்கு, அதன் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் தொடர்பாக ஊழியர்கள் மற்றும் இந்நாட்டின் பொதுமக்கள் மத்தியில் கடுமையான பிரச்சாரம் செய்வது ஒரு அவசர அவசியமென அக்கூட்டம் உணர்ந்தது. கூட்டு நடவடிக்கைக் குழு உடனடியாக அமுலாக்க வேண்டியது என கீழ்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது.

**அ) ஸ்பெக்ட்ரம் கட்டணமாக ஒரு மிகப் பெரிய தொகையினை நியாயமற்ற முறையில் BSNL நிறுவனத்திடமிருந்து வசூலித்த விஷயத்தில் அனைத்து ஊழியர்களிடமிருந்தும் கையொப்பம் வாங்கி பாரதப் பிரதமருக்கு மூன்று லட்சம் தபால் அட்டைகளை அனுப்புவது. 2010, ஜூலை 5ஆம் தேதிக்குள் இந்த தபால் அட்டைகள் அனுப்பி விட வேண்டும்.**

**ஆ) ஊழியர்களையும் பொதுமக்களையும் திரட்டுவதற்காக உடனடியாக நாடு முழுவதும் கருத்தரங்கங்களை நடத்துவது.**

**இ) ஒரு தேசியக் கருத்தரங்கத்தினை ஜூலை 21ஆம் தேதி டெல்லியில் நடத்துவது. அனைத்து மத்திய தொழிற்சங்க தலைவர்களையும் இந்தக் கருத்தரங்கத்திற்கு அழைப்பது.**

**ஈ) டெல்லியில் தேசியக் கருத்தரங்கம் நடைபெறுவதற்கு முன்பு குறைந்த பட்சம் கொல்கொத்தா, சென்னை, பெங்களூரு, மும்பை (அல்லது மகாராஷ்டிராவில் ஏதாவது ஒரு நகரில்), ஜெய்பூர் மற்றும் லக்னோ ஆகிய இடங்களிலாவது பிராந்திய கருத்தரங்கங்களை நடத்துவது.**

**உ) மாவட்ட, மாநில மட்டங்களில் உடனடியாக கூட்டு நடவடிக்கைக் குழுக்களை உருவாக்க வேண்டும்.**

தோழர்களே, மேலே சொல்லப்பட்ட விஷயங்களின் அடிப்படையில் மிக வேகமாக செயல் பட வேண்டியது மிக மிக அவசியம். BSNL நிறுவனம் ஒரு நஷ்டத்தில் இயங்கும் ஒரு நிறுவனமாக மாறி உள்ளது. அதன் உபரி நிதி அனைத்தும் வெகு விரைவில் மறையும் நிலை உள்ளது. BSNLல் உள்ள மூன்று லட்சம் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரின் எதிர்காலம் அச்சுறுத்தக் கூடிய நிலையில் உள்ளது. BSNL ஐ பாதுகாக்க ஒட்டுமொத்த ஊழியர்களின் ஒற்றுமையும் பொதுமக்களின் ஆதரவும் மிக மிக அவசியம். எனவே அதற்கான நடவடிக்கைகளை நாம் வேகமாக மேற்கொள்வோம். நமது போராட்டத்தில் சமரசம் செய்து கொள்ளும் இடமில்லை. நமது வாழ்வைக் காப்பாற்ற அரசாங்கம் தனது கொள்கைகளை மாற்ற செய்யக் கூடிய அளவிற்கு வலுவான பிரச்சாரத்தை கொண்டு செல்வோம். இறுதி வெற்றி நமதே என உறுதியுடன் செயல்படுவோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள**

**M.முருகையா.**
**மாநில செயலர்(பொறுப்பு)**

## தபால் அட்டையின் வாசகங்கள் (இந்த வாசகங்கள் கையினால் எழுதப் பட வேண்டும் அச்சடிக்கக் கூடாது):-

To
Shri Manmohan Singh ji,
Honourable Prime Minister,
Government of India,
South block, Raisina Hill,
New Delhi-110 101.

Respected Sir,

Kindly assure financial viability of BSNL by reimbursing 3G and BWA spectrum charges of Rs.18,500 Crores, paid by BSNL, to enable it to implement the socio economic commitments of the Central Government.

Place: Signature:
Date : Name :
Designation:
Office :